# யா. கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை

## திறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் - 2017

இடம் : வித்தியாசாலைக் கலையரங்கம்

காலம் : 17.10.2017, செவ்வாய்க் கிழமை,

நேரம் : மு.ப 9.30

**தலைவர்**

**திரு. ந. கந்தவனச் செல்வன் (அதிபர்)**

பிரதம விருந்தினர்

**கௌரவ, கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்**

(கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர், வடக்குமாகாணம்)

சிறப்பு விருந்தினர்

**திரு. சி. மாணிக்கராஜா**

(பிரதிக்கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி – யாழ் கல்விவலயம்)

கௌரவ விருந்தினர்

**திரு. இராமநாதன் ஸ்ரீகாந்தா**

(பழையமாணவன், பிரதான உள்ளக கணக்காய்வாளர் (RIO) - இலங்கை போக்கவரத்துச்சபை வடக்கு மாகாணம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

## நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- நிறுவுநர் உருவபடத்திற்கு வணக்கம் செலுத்துதல்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- அதிபரின் பரிசுத்தின அறிக்கை
- News Reading
- பேச்சு –செல்வி. ச. சாந்தினா
- அபிநயப் பாடல் தரம் 1, 2 மாணவர்கள்
- பிரதம விருந்தினர் உரை
- பாட்டு – தரம் 9,10,11 மாணவர்கள்
- கிராமிய நடனம்
- பேச்சு – செல்வி. ஜீ. டிலக்சனா
- அபிநயப் பாடல் தரம் 3,4 மாணவர்கள்
- சிறப்பு விருந்தினர் உரை
- கவிதை - செல்வன். ந. சாரங்கன்
- குழுநடனம் - தரம் 4 மாணவிகள்
- கௌரவ விருந்தினர் உரை
- English Song
- ஒயிலாட்டம்
- பரிசில் வழங்கல்
- நன்றியுரை
- பாடசாலைக்கீதம்

## யா/ கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை பரிசளிப்பு விழா அறிக்கை – 2017

எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமானின் பாதார விந்தங்களை பணிந்து யா/கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலையின் பரிசுத்தின அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

இன்றைய விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் கௌரவ, கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்களே! சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.சி.மாணிக்கராஜா அவர்களே! கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது பாடசாலையின் பழையமாணவன் திரு. ஸ்ரீகாந்தா அவர்களே! மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகளே! ஏனைய பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! முன்னாள் அதிபர்களே! ஆசிரியர்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! பழையமாணவர்களே! பாடசாலை அபிலிருத்திச்சங்க உறுப்பினர்களே! எமது பாடசாலை ஆசிரியர்களே! எனதருமை மாணவச்செல்வங்களே! அனைவரையும் முதலில் இருகரம் கூப்பி வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இங்கு பிரதம விருந்தினராக கலந்து எமது பரிசளிப்பு விழாவை உயிரோட்டமாக்கிக் கொண்டிருக்கும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்கள் மிகச் சிறந்த அரசியல் ஆய்வாளரும் விரிவுரையாளருமாவார்.

இவர் கட்டைப்பிராயை பிறப்பிடமாக கொண்டவர். இவர் தனது ஆரம்பகல்வியை செங்குந்தா இந்துக் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியையும், உயர் கல்வியையும் யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், யா/மத்திய கல்லூரியிலும் பயின்றவர் அத்துடன் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பையும்

ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும், கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். இவர் 1994 ம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார். 2013 ம் ஆண்டிற்குப் பின் அரசியலில் ஈடுபட்டும் தமிழ் பத்திரிகை வாயிலாக தமிழரின் வாழ்வு சுய நிர்ணய உரிமை, சுதந்திர விடுதலை, பிரதேசபற்று என்பவற்றை எழுத்தினூடாக வடித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். 2015 இல் வடக்கு மாகாணத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு தற்போது கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர், விவகார அமைச்சராக தெரிவு செய்யப்பட்டு சிறப்பாக செயற்பட்டு வருகின்றார்.

இவர் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் அந்த மக்களின் வாழ்வாதரத்தின் மேம்பாட்டிற்கும், உயர்வுக்குமாக அரும்பாடுபட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறப்பு விருந்தினராக எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் பிரதிக் கல்விப்பணிப்பாளர்(கல்வி அபிவிருத்தி) உயர் திரு சி. மாணிக்கராஜா அவர்கள் எதனையும் நடைமுறைக் கண்ணோட்டத்திலும் நிகழ்காலத்தில் எதனை நாம் உடனடியாகச் செய்ய வேண்டுமோ அதனை முடிந்தளவிற்கு உடனடியாகவும் இலகுவாகவும் நிர்வாக நடைமுறைகளை மேற் கொள்ள கல்வி நிர்வாகத்திலும் சரி மாணவரின் கற்றல் நடவடிக்கையிலும் சரி தன்னை ஈடுபடுத்தி வழிகாட்டும் மிகச் சிறந்த கல்வி நிர்வாகி ஆவார். இவருடைய காலத்திலேயே கோட்டக்கல்வி அலுவலகங்கள் பெயரளவில் மட்டும் இயங்காது தற்துணிவுடனும் அதிகாரம் மிக்கவையுமாக ஆக்கிய பெருமை இவரையே சாரும். அத்துடன் இவர் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளராக இருந்த போது யாழ் மாவட்டத்திலேயே மிகச் சிறந்த கோட்டக் கல்விப்பணிமனையாக தெரிவு செய்யப்பட்டமையும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

வன்னி மண்ணில் பிறந்த இவர் தனது ஆரம்ப கல்வியை கண்டாவளை மகாவித்தியாலயத்திலும், உயர் கல்வியை சாவகச்சேரி இந்த கல்லூரியிலும் கற்றவர். அத்துடன் யாழ் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் சிறப்புப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர். இவர் 1985ம் ஆண்டில் தனது முதல் ஆசிரிய நியமனத்தை தான் கற்ற கண்டாவளை மகா வித்தியாலத்தில் ஏற்று பணியாற்றினார் அதன் பின் 1990ம் ஆண்டிலிருந்து சமூகக் கல்வி ஆசிரிய ஆலோசகராக கடமையாற்றி வந்தார்.

அத்துடன் 1991இல் நடாத்தப்பட்ட அதிபர் சேவை தரம் II பரிட்சையில் சித்தியடைந்து 1994இல் கண்டாவளை மகா வித்தியாலயத்திற்கு அதிபராகி கல்வித்துறையில் பல சாதனைகளைச் செய்தார். இவரின் திறமையால் 2003ம் ஆண்டு அதிபர் வாண்மை விருத்திப் பயிற்சிக்கென புலமைப்பரிசில் பெற்று கனடா சென்று பயிற்சி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

2007இல் நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளராக உயர்வு பெற்ற இவர் 2011இல் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உள்வாங்கப்பட்டு 2013இல் யாழ் கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வருகின்றார். இவரின் அதீத திறமையினால் 2016இல் கல்வி நிர்வாகம் சார்திறன்விருத்தி பயிற்சிக்கென தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்று பயிற்சி பெற்றார். இவர் தனது அயராத உழைப்பால் மாணவ சமுதாயத்திற்கு அரும்பணியாற்றி வழிகாட்டி கொண்டிருப்பது யாழ் கல்விச் சமூகத்திற்கு கிடைத்த பெரும் பேறாகும்.

இன்றைய விழாவிற்கு கௌரவ விருந்தினராக வருகைதந்திருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவனும், இலங்கை போக்கவரத்துச்சபை உள்ளகக் கணக்காய்வாளருமான திரு. இராமநாதன் ஸ்ரீகாந்தா அவர்கள் ஆரம்பக் கல்வியை எமது பாடசாலையிலும, உயர்கல்வியை யா/கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றவர். ஆரம்பத்தில் கொக்குவில் பிரதேசசபை நூலகத்தில் நூலக உதவியாளராகப் பணியாற்றினார். பின்னர்

1980 இல் இலங்கைப் போக்குவரத்துச்சபையில் இணைந்து கணக்காய்வாளராக பதவியுயர்வு பெற்றார். இவரின் திறமையான சேவையினால் இவர் தற்போது வடபிராந்திய உள்ளகக் கணக்காய்வாளராக மிகப்பெரும் பணியாற்றி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் தான் பிறந்த கொக்குவில் கிராமத்தின் மீது மிகுந்த பற்றுடையவராகக் காணப்படுவதோடு தான் கல்விகற்ற தமது பாடசாலை மீது மிகுந்த கரிசனையும், மாணவர்களின் கல்வி விருத்திக்கும் தன்னாலான உதவிகளைச் செய்துவருபவர். தன்னலமறியாசேவை மனப்பாங்கு கொண்ட இவர் தொடர்ந்தும் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவரது சேவையை எமது பாடசாலைச் சமூகம் வேண்டி நிற்கின்றது.

மேலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் ஆலோசனைகளையும் வழங்கி ஆக்கமும் ஊக்கமும் தந்து கொண்டிருக்கும் எமது கல்வித் திணைக்கள அதிகாரிகளையும் வருக வருக என அழைப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

மற்றும் இவ்விழாவை மெருகூட்ட வந்திருக்கும் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்ட முன்னாள் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சேவைகளையும் இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்து எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் அனைவரையும் அவர்களது சேவைகளையும் வரவேற்பதில் உவகை அடைகின்றேன்.

இத்துடன் எமது பாடசாலையை சிறப்பாக இயக்கிக் கொண்டிருக்கும் எமது பாடசாலைஆசிரியர்களின் சேவைகளையும் இச்சந்தர்ப்பத்தில் மனநிறைவுடன் பாராட்டி அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது பாடசாலையான யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்ட ஓர் இடைநிலைப் பாடசாலையாகும்.

இங்கு வாழும் மாணவர்களில் அனேகமானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களாகவும் தாய் அல்லது தந்தையரை இழந்தவராகவும் காணப்படுகின்றனர். அத்துடன் இவர்களில் விசேட தேவைக்குரிய மாணவர்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வாறான சூழ்நிலை கொண்ட எமது பாடசாலை மாணவர்களின் பொதுப்பரீட்சை பெறுபேற்றை, சித்தி வீதத்தை அதிகரிக்கும் நோக்குடன் பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக காலை, மாலை, சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும் மேலதிக கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தரம்5 புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய மாணவர்களுக்கு விசேடவகுப்புக்கள் நடாத்தப்பட்டு மாணவர்களின் அடிப்படைத் கற்றல் தேர்ச்சிச் செயற்பாடுகளும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் எமது பாடசாலையின் பாரிய குறைபாடாக விளையாட்டு மைதானம் இல்லாது காணப்படுகிறது. எனினும் எமது மாணவர்கள் உள்ளக விளையாட்டுக்களான பட்மின்ரன், கரம், சதுரங்கம், மேசைப்பந்து போன்றவற்றில் தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். அந்தவகையில் 2013ம் ஆண்டிலிருந்து எமது அதிபரின் அயராத முயற்ச்சியால் பூப்பந்து ஆண்கள் அணி ஆரம்பிக்கப்பட்டு 2014ம் ஆண்டு வலயமட்டத்தில் வெற்றி பெற்றதோடு,மாகாணமட்டத்திற்கு தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. 2015இல் 19 வயது அணி வலய மட்டத்தில் 3ம் இடத்தையும் 15வயது பிரிவு 1ம்இடத்தினையும் மாகாணமட்டத்தில் 2ம் இடத்தினையும் பெற்றனர். தொடர்ந்தும் 2016ம் ஆண்டு 15 வயதுப் பிரிவு ஆண்கள் அணி வலய மட்டத்தில் 2ம் இடத்தினையும் 19 வயதின் கீழ் ஆண்கள் அணி வல்ய மட்டத்தில் 2ம் இடத்தையும் பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். இதில் 15

வயதின் கீழ் ஆண்கள் அணி மாகாண மட்டத்தில் 3ம் இடத்தைப்பெற்று தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகி சென்றதோடு இவ்வருடம் 17 வயதின் கீழ் ஆண்கள் வலயமட்டத்தில் 1ம் இடத்தையும், மாகாண மட்டத்தில் 3ம் இடம் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளமை எமது பாடசாலைக்கு பெருமை தேடித்தந்த ஓர் விடயமாக காணப்படுகிறது.

எமது பாடசாலை சிறிய பாடசாலையாக இருந்தாலும் எமது சிறார்கள் விளையாட்டு மட்டுமின்றி இணைபாடவிதான செயற்பாடுகளிலும் கலந்து போட்டியிட்டு பாராட்டுக்களைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்து வருகின்றமை இங்கு போற்றுவதற்குரிய விடயமாகும். இதற்காக தங்களை அர்ப்பணிக்கின்ற ஆசிரியர்களிற்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் 2016ம் ஆண்டு தொடக்கம் மாணவ பாராளுமன்ற அணி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்தும் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கு பொறுப்பாக உள்ள ஆசிரியரான திரு. நி.நவநீதகுமரன் அவர்களுக்கு எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்து நிற்கின்றேன்.

இங்கு கற்பித்து ஓய்வு பெற்று சென்ற ஆசிரியர்களால் எமது மாணவர்களின் இணைபாடவிதான செயற்பாடுகளுக்கும், கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் ஒத்தாசை புரிந்து வருகின்றனர். அவ் அனைத்து ஆசிரியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளை தெரிவித்து நிற்கின்றேன்.

மேலும் பிரதேச சுகாதார திணைக்களத்தினால் டெங்கு அற்ற சிறந்த சுற்றுச் சூழல் கொண்ட பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டு ரூபா5000.00 பரிசு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**“ஒவ்வொருவனும் தனக்காக வாழ்கிறான்**
**கடவுள் எல்லோருக்காகவும் வாழ்கிறான்.”**

➢ மன்றச் செயற்பாடுகள்

- ஆரம்பக்கல்வி மன்றம்
- இந்து மன்றம்
- தமிழ் மன்றம்
- ஆங்கில, சிங்கள மன்றம்
- கணித விஞ்ஞான மன்றம்
- சமூக விஞ்ஞான மன்றம்
- கவின் கலை மன்றம்
- சுகாதாரக் கழகம்
- சுற்றாடல் கழகம் (ஆரம்பபிரிவு)
- அனர்த்த பாதுகாப்புக் கழகம்
- மாணவர் பாராளுமன்றம்

இவ்மன்றங்களின் ஊடாகவும் கழகங்களின் ஊடாகவும் மாணவர்களுக்கு பல்வேறு திறன் விருத்திகளையும் ஊக்குவிப்புக்களையும் வழங்கி வருவதோடு தனியாள் வேறுபாட்டினையும் இனங்கண்டு அதனை ஊக்குவிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது. அத்துடன் இம்மன்றங்களின் ஊடாக மாணவர்கள் பல்வேறு போட்டிகளிலும் பங்குற்றி பரிசில்களையும் பெற்று வருகின்றனர்.

இம் மன்றங்களின் ஊடாக மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்குகின்ற ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு அவர்களுக்கு எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"இரவை விட பகலில் தான் மேகங்கள் விரைவாக நகர்கின்றன."**

ஒரு பாடசாலையின் அடைவுகளை அதிகரிக்கச் செய்வதற்கு கல்வி மேம்பாட்டிற்கான விசேட கற்றல் செயல்திட்டங்கள், ஆசிரியரின் அர்ப்பணிப்பான சேவைகள், மேலதிக வகுப்புக்கள், சிறந்த முகாமைத்துவக் கட்டமைப்பு, பாடத்திட்டமிடல், பாடமுன்னாயத்தம், தரமான உள்ளீடுகளின் பயன்பாடு, செயன்முறைக்கற்பித்தல் என்பவற்றுடன் பெற்றோர் மாணவர்களின் முழுமையான ஈடுபாடும் தொடர்ச்சியான மாணவரின் கற்றலுமே சிறந்த பெறுபேற்றை தரும் எனலாம்.

## க. பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறு – 2016

| பாடம் | சித்தி வீதம் |
|---|---|
| சைவ சமயம் | 94% |
| தமிழ் மொழி | 76% |
| ஆங்கிலம் | 06% |
| விஞ்ஞானம் | 41% |
| கணிதம் | 35% |
| வரலாறு | 76% |
| சித்திரம் | 88% |
| சங்கீதம் | 100% |
| புவியியல் | 78% |
| குடியியல் கல்வி | 100% |
| மனைப்பொருளியல் | 100% |
| வணிகக்கல்வியும் கணக்கீடும் | 100% |
| சுகாதாரம் | 73% |
| நடனம் | 100% |
| மின்னாவணப்படுத்தல் | 100% |

தோற்றிய மாணவர் தொகை : 17

க. பொ.த (உ/த)தெரிவானோர் : 05

## க. பொ.த (உ/த) தெரிவானோர் விபரம்

- அ. நிசாந்தினி
- வி. எழில்
- ச. சுவேந்திரன்
- வா. சுபவசன்
- ப. மதிவதனன்

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு – 2017

| | |
|---|---|
| தோற்றிய மாணவர்கள் | 08 |
| சித்தி பெற்றோர் | 01 |
| 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் | 02 |

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70இற்கு மேல் சித்தியடைந்தோர் விபரம்.

- வி. நிலாவிழி - 161
- உ. றெபேக்கா - 107
- போ. சுஜின் - 99
- க. கடம்பேசன் - 93

## பாடசாலை பௌதிகவள அபிவிருத்தியும் கரம் கொடுப்போரும்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்குத் தேவையான பௌதிகவள விருத்தியிலும் கல்வி வளர்ச்சியிலும் எமக்கு உறுதுணையாக நின்று உதவிக்கரம் நீட்டும் கல்வித் திணைக்களம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், உள்நாட்டு வெளிநாட்டு பழைய மாணவர்கள், அபிவிருத்திக் குழு, நாடாளுமன்ற உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், கல்வி நம்பிக்கை நிதியம், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஆகியோர் பாராட்டிற்கு உரியவர்கள். இவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

எமது பாடசாலையில் விளையாட்டு மைதானம் இல்லாத குறையை நிவர்த்திசெய்யும் முயற்சியில் பழைய மாணவர்களால் பாடசாலைக்கு அருகில் 7 ½ பரப்புக் காணியை கொள்வனவு செய்யும் முயற்சி சென்ற வருட ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தொடர்ந்தும் வருடா வருடம் நடைபெறும் பரிசளிப்பு விழாவிற்கான நிதியினை அன்பளிப்புச்செய்து கொண்டிருக்கும் அவுஸ்ரேலியாவில் வசிக்கும் திரு. ந. சதீஸ்குமார் அவர்கள் இம்முறையும் பரிசளிப்பு விழாவிற்கான நிதியினையும் அன்பளிப்புச் செய்துள்ளார். அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். 2011ம் ஆண்டில் இருந்து இவ் உதவியினை எங்கள் பாடசாலைக்குத் தொடர்ந்தும் செய்து வருகின்றனர்.

## பாடசாலைசார் அமைப்புக்கள்

1. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
2. பழைய மாணவர் சங்கம்
3. கல்வி நம்பிக்கை நிதியம்

## இவ்வருடம் எமது பாடசாலைக்கு உதவியோர் விபரம்

1. UKயில் வசிக்கும் குணரட்ணம் குமுதினி பழைய மாணவி 35000.00
2. ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி. இ. பூபதி 1000.00
3. திரு. சி. பகீதரன் பழைய மாணவன் 5000.00
4. செல்வி. சி. மாலதி ஆசிரியர், பழைய மாணவி 5000.00
5. திரு. கு. குகதாசன் அவர்களால் சுகமஞ்சரி எனும் மாதாந்த ப்த்திரிகை வழங்கப்பட்டு வருகின்றது.
6. திரு. குமாரசாமி தட்சணாமூர்த்தி என்ற பழைய மாணவரால் 2017ம் ஆண்டுபுலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிக்கு துவிச்சக்கரவண்டி ஒன்று வழங்கியுள்ளார். இவர் கடந்த 3 வருடங்களாக இவ்வுதவியை வழங்கி வருகின்றார்.

7. திரு. தேவசகாயம் பிரேமகுமார் பழைய மாணவன் ஜேர்மனி முதலுதவி உபகரணங்கள் வழங்கியமை
8. நடராஜப்பெருமாள் சுதேஸ்குமார் பழைய மாணவன் 25 மாணவர்களுக்கான சப்பாத்துக்கள் வழங்கியமை
9. திருமதி. கலா சுந்தரேசன் ரூபா 5000.00 அன்பளிப்புச் செய்துள்ளமை.
10. எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திரு. க. சாந்தகுமார் ரூபா 3000.00 அன்பளிப்பாக வழங்கியமை.
11. எமது பாடசாலையின் முன்னால் ஆசிரியர். திரு. செ. ரகுதாஸ் 1000.00 அன்பளிப்பாக வழங்கியுள்ளமை
12. எமது பாடசாலை ஆசிரியர் திருமதி. இ. நடராஜா 1000.00 அன்பளிப்பாக வழங்கியுள்ளார்

## ➢ பாடசாலைத் தேவைகள்

1. வகுப்பறை பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு இருமாடிகளைக் கொண்ட கட்டடங்களை அமைத்தல்.
2. விளையாட்டுப் போட்டி, பெரு விளையாட்டுக்களை நடாத்துவதற்கான மைதானம்.
3. மூடிய வகுப்பறைகள்
4. செயற்பாட்டறைகள்
5. மேலதிக பாட வகுப்பறைகள், நடன அறை
6. ஆசிரியர் ஓய்வறை
7. சிற்றூண்டிச் சாலை

## நன்றியுரை

"நன்றி மறப்பது நன்றன்று" என்பதற்கேற்ப எமது பாடசாலையின் குறுகிய அழைப்பை ஏற்று இவ்விழாவிற்கு பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் பிரதம விருந்தினராக வருகை தந்து, கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வடக்கு மாகாணசபை கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ, கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் அவர்களுக்கு எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தனது பல்வேறு பணிச்சுமைகளையும் கருத்தில் கொள்ளாது சிறப்பு விருந்தினராக வந்து எமக்கு வழிகாட்டி மகிழ்வித்துக் கொண்டிருக்கும் எமது வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. மாணிக்கராசா அவர்களுக்கும் எனது மனமுவர்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது பாடசாலைக்கு அருகில் இருந்து எமக்குத் தேவையான போது பல்வேறு உதவிகளையும் செய்துவரும் எமது பாடசாலையின் பழைய மாணவரும், கௌரவ விருந்தினருமாகிய திரு. இராமநாதன் ஸ்ரீகாந்தா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை கூறிக்கொள்வதில் மகிழ்வடைகிறேன்.

எமதுபாடசாலைச் செயற்பாடுகளை அறிந்து தேவையான போது ஆளனியினரையும், நிதி வளங்களையும், நிர்வாகத் தேவைகளையும் வழங்கி வரும் யாழ் வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களுக்கும் ஏனைய திணைக்கள அதிகாரிகளுக்கும் எனது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலைத்தேவைகளைஉணர்ந்து வேண்டியபொழுதில் உதவிகளை நல்கிவரும் அன்புக்குரிய உள்நாட்டு, வெளிநாட்டு பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள் மற்றும் வங்கி, அரச,அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

எமது பாடசாலை செயற்பாடுகளில் இணைந்து செயற்பட்டு வரும் மதிப்பிற்குரிய ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர், மாணவச்செல்வங்கள் ஆகியோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

இப்பாடசாலை மேலும் வளர்வதற்கு எல்லோரும் ஒருங்கிணைந்து உதவிக்கரம் நீட்டி பயன்மிக்க பாடசாலையாகத்திகழ எல்லாம் வல்ல ஞான வைரவப்பெருமானை வணங்கி இதுவரை பொறுமையாக இருந்து பரிசளிப்பு விழா அறிக்கையை அமைதியுடன் செவிமடுத்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

## ➢ பாடசாலை மாணவர் தொகை

தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை

ஆண்கள் - 94

பெண்கள் - 70

மொத்தம் - 164 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்

## ➢ முகாமைத்துவ கட்டமைப்பு

அதிபர் : திரு. ந. கந்தவனச்செல்வன்

பாடசாலை முகாமைத்துவக் குழு : திரு. ந. கந்தவனச்செல்வன்
திருமதி. ச. கனகராசா
திருமதி. க. விஸ்வநாதன்
திருமதி. நா. சண்முகரட்ணம்
திருமதி. இ. நடராசா
திருமதி. ம. சத்தியசீலன்

உள்ளக மேற்பார்வை : திரு. ந. கந்தவனச்செல்வன்
திருமதி. க. விஸ்வநாதன்
திருமதி. இ. நடராசா
திருமதி. நா. சண்முகரட்ணம்

விசேடகல்வி : திருமதி. ச. நாததீபா
திருமதி. நா. சண்முகரட்ணம்

வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி. ம. சத்தியசீலன்

## ➢ ஆசிரியர் விரம் - 2017

| இல | முழுப்பெயர் | சேவை | கல்வித்தகமை | தொழிற்தகமை |
|---|---|---|---|---|
| 1 | திரு.நடராஜா கந்தவனச்செல்வன் | அதிபர் SLPS 2 II | B.SC | PGDE. MED |
| 2 | திருமதி.சகுந்தலாதேவி கனகராஜா | SLTS I | A/L | PRIMARY TRD |
| 3 | திரு.சங்கரப்பிள்ளை சிவலிங்கம் | SLTS I | A/L | MATHS TRD |
| 4 | திரு.சங்கரப்பிள்ளை தயானந்தன் | SLTS I | A/L | ART TRD |
| 5 | திருமதி.இராசராணி நடராசா | SLTS I | A/L | MATHS TRD |
| 6 | திருமதி.நாகேஸ்வரி சண்முகரட்ணம் | SLTS I | A/L | PRIMARY TRD |
| 7 | திருமதி.கலாரஜனி விஸ்வநாதன் | SLTS I | A/L | MATHS TRD |
| 8 | திருமதி.சகுந்தலாதேவி செல்வராஜா (ப.நே) | SLTS I | A/L | H.Economic Trd |
| 9 | திருமதி.மங்களேஸ்வரி சத்தியசீலன் | SLTS I | B.Com | PGDE, M.ED |
| 10 | திருமதி.பத்மலோசினி சற்குணமூர்த்தி | SLTS I | B.A | PGDE |
| 11 | திருமதி.கௌரி சயந்தராஜன் | SLTS I | B.A | ScienceTrd. PGDE |
| 12 | திருமதி. சுஜாந்தினி திவாகரன் | SLTS I | B.A | ScienceTrd. PGDE |
| 13 | திருமதி. வசந்தகௌரி நந்தகுமார் | SLTS2 II | B.A (Hon) | |
| 14 | திருமதி. சுகந்தினி நவநீதன் | SLTS 2 II | B.A (Hon) | PGDE, Dip.in.L.sci |
| 15 | திரு. நித்தியானந்தம் நவநீதகுமரன் | SLTS 2 II | B.A | PGDE |
| 16 | திருமதி. சுதர்சினி சோமேஸ்வரன் | SLTS 2 II | B.A | Primary Trd |
| 17 | திருமதி. நாததீபா சதீஸ்குமார் | SLTS 2 II | B.FA (Mu) | PGDE |
| 18 | திருமதி. நிரஞ்சினி சுரேஸ் | SLTS 2 II | A/L | Primary Trd |
| 19 | திருமதி. லவதுஷா கஜேந்திரன் | SLTS 2 II | B.A | NCOE Dip. Dance |
| 20 | திருமதி. பிரதாயினி கமலேஸ்வரசர்மா ப.நே) | SLTS 2 I | A/L | Com.Trd |
| 21 | திருமதி. கலாராணி றஜீவன் | SLTS 2 I | B.A , M.A | PGDE |
| 22 | திருமதி. அமர்தவர்சினி சுதர்சன் | SLTS 3 I | A/L | NCOE Dip. English |
| 23 | திருமதி. றஜனி ஜெயதாஸ் | SLTS I | B.A | Sci.Trd.PGDE |
| 24 | திருமதி.பாலரஜனி குகநேசன் | SLTS 2 I | A/L | Dip.in.p.Ed |

தொழில்நுட்பக்கல்லூரி பயிலுநர் : செல்வி.ந.சர்மிஜா

கல்விசாரா ஊழியர்கள் : திரு. ப. நிரஞ்சன்

திரு. மா. இராமலிங்கம்

பதில் கடமை : திரு. வி. செல்வராஜா

## ➢ இடமாற்றம் பெற்று எமது பாடசாலையில் இணைந்தோர்

- திருமதி. பாலரஜனி குகநேசன்
- திருமதி. றஜனி ஜெயதாஸ்

## ➢ பாடசாலையின் அதிபர்கள் விபரம்

- உயர்திரு குமார சுவாமிப்புலவர் (நிறுவுனர் 18.10.1922
- திரு. தம்பு தர்மலிங்கம் 1969 – 1986
- திருமதி. கண்ணம்மா தர்மலிங்கம் 1986 – 1987
- திரு. கார்த்திகேசு கணேசதாசன் 1987 – 1990
- திரு. கந்தையா பழனிவேற்பிள்ளை 1991 – 1995
- திரு. திருநாவுக்கரசு கிருஸ்ணகுமார் 1996 – 2005
- திரு. கணாதிப்பிள்ளை பரமேஸ்வரன் 2006 – 2008
- திரு. செல்லையா இளங்கோ 2009 – 2011
- திரு. நடராசா கந்தவனச்செல்வன் 2011- இன்றுவரை

**"சிந்தனையோடு உழைப்பும் சேரும் போது நம்மை அறியாமலே ஆற்றல் மிக்கவர்களாக வாழத் தொடங்குகிறோம்."**

## யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்

| அன்பளிப்புச் செய்தோர் | ஞாபகார்த்தம் | நோக்கம் | தொகை |
|---|---|---|---|
| திரு. தேவசகாயம் நடனகுமார் | திரு. சுப்ரமணியம் இரத்தியசபாபதி | புலமைப்பரிசில் | 100,000.00 |
| திரு. வடிவேலு மயுரேசன் | திருமதி. நவசக்தி வடிவேலு | பரிசளிப்பு, புலமைப்பரிசில் | 100,000.00 |
| திரு.ந. துஸ்யந்தனும் உறவினர்களும் | திரு. எஸ். ஜனகன் | கற்றல் செயற்பாடு, பரிசளிப்பு, விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு | 100,000.00 |
| திரு. சண்முகம் சிவபாலன் | திருமதி. பாக்கியரத்தினம் சண்முகநாதன் | கற்றல் செயற்பாடு, பரிசளிப்பு, விளையாட்டு | 50,000.00 |
| திருமதி. சந்தானலட்சுமி செல்வேந்திரா<br>திருமதி. சந்தானதேவி மனோகரன்<br>திருமதி. சந்தான பூபதி இரத்தினகோபால் | அமரர் அன்னரத்தினம் தம்பிநாயகம் தாயார் ஞாபகார்த்தம்<br><br>திரு. வேலுப்பிள்ளை தம்பி நாயகம் தந்தையார் ஞாபகார்த்தம்<br><br>திரு. திருமதி. தம்பிநாயகம் ஞாபகார்த்தம் | தரம் 10ல் திறமைச் சித்தி அடையும் மாணவிக்கு 35%<br><br>தரம் 10ல் திறமைச் சித்தி அடையும் மாணவனுக்கு 35%<br><br>பரிசளிப்பு விழா 30% | 350,000.00 |
| திருமதி. சறோஜினிதேவி கணேசலிங்கம் | திரு. அம்பலவாணர் மயில்வாகனம்<br><br>திருமதி. அன்னபூரணம் மயில்வாகனம் | | 100,000.00 |

**நன்கொடை வழங்கியோர் நிலையான வைப்பில் இடப்பட்டமை**

| அன்பளிப்புச் செய்தோர் | ஞாபகார்த்தம் | நோக்கம் | தொகை |
|---|---|---|---|
| திரு.சி.திருச்செல்வம் | ........ | க.பொ.த (சா.த) விசேட சித்தி | 25,000.00 |
| திரு.கதிர்காமர் சுப்ரமணியம் | மனைவி சுகிர்தலக்சுமி (ஆசிரியை) | க.பொ.த (சா.த), தரம்10, புலமைப்பரிசில் பரீட்சை | 50,000.00 |

**"சிரிப்பு நல்லதும் செய்யும், கெட்டதும் செய்யும் அதனை பிரித்தறியக் கற்றுக்கொள்."**

**"நேர்மைக்கு பலன் கிடைக்கும் ஆனால் நெடுநாள் காத்திருக்க வேண்டும்."**

**'நாளை நாளை என்று எதனையும் தள்ளிப் போடாதே. இன்றே செய் நன்றே செய்'**

## இணைப்பாடவிதான செயற்பாட்டில் சாதனை படைத்த மாணவர்கள்

➢ பூப்பந்தாட்டப் போட்டி 17 வயதின் கீழ் ஆண்கள்
வலய மட்டம் முதலாம் இடம்
மாகாண மட்டம் மூன்றாம் இடம்
தேசியமட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

- நா. ஜெபின்சன்
- சொ. சாரங்கன்
- அ. கோபிநாத்
- சு. மிதுசன்
- ச. யசிந்தன்
- அ. அபிசங்கர்
- அ. மிதுசன்

➢ விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாணமட்டப் பூப்பந்தாட்டத் தெரிவுப்போட்டியில் பங்குபற்றியமை.

- நா. ஜெபின்சன் - 8ம் இடம்
- சொ. சாரங்கன் - 9ம் இடம்
- அ. கோபிநாத்
- சு. மிதுசன்
- ம. டிலக்சன்
- பு. புரட்சிகன்
- அ. மிதுசன்
- இ. சர்மிலன்
- ச. யசிந்தன்
- அ. அபிசங்கர்

- மாவட்டப் பூப்பந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் 4ம் இடத்தைப் பெற்றமை.
  - நா. ஜெபின்சன்
  - சொ. சாரங்கன்
  - அ. கோபிநாத்
  - சு. மிதுசன்
- கோட்டமட்ட மெய்வல்லுனர் போட்டியில் சொ. சாரங்கன் 18 வயதின் கீழ் ஆண்கள் நீளம் பாய்தலில் 1ம் இடம். வலய மட்டப் போட்டியில் பங்குபற்றியமை
- விசேட கல்வி –வ. தர்மிகா
  100mஓட்டம் மாகாணம் 1ம் இடம்
  சித்திரம் வலய மட்டம் 1ம் இடம்
  தனியிசை வலய மட்டம் 2ம்இடம்
- சித்திரப் போட்டி கோட்ட மட்டம் 4ம் இடம் உ. அக்ஷயா
- சமூக விஞ்ஞானப் போட்டி – கோட்டமட்டம்
  - தி. பிரதாஸ் - 1ம் இடம்
  - சி. கௌரிபாலன் - 2ம் இடம்
  - அ. அபிசங்கர் - 3ம் இடம்
  - 
- நல்லூர் பிரதேச மட்ட தேசியக் கலை இலக்கியப் போட்டி கட்டுரையாக்கம்
  - பு. நிந்துஜா – கனிஸ்ட பிரிவு 3ம் இடம்
  - நா. ஜெபின்சன் - சிரேஸ்ட பிரிவு 1ம

**"பிறரை நம்பி வாழ்பவருக்கு வறுமை இருந்து கொண்டே இருக்கும்."**

## பரிசில் பெறும் மாணவர் விபரம் - 2016

| தரம் | பெயர் | பாடங்கள் |
|---|---|---|
| தரம் 01 | ர. தக்சயன் | பொதுத்தகைமை, தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் |
| | ம. சுசந்திகா | பொதுத்தகைமை, தமிழ், சமயம், சுற்றாடல், கணிதம் |
| | தி. லாவண்யா | பொதுத்தகைமை, தமிழ், சமயம், சுற்றாடல்,கணிதம் |
| | ச. அட்சயா | பொதுத்தகைமை, தமிழ், சமயம். சுற்றாடல், கணிதம் |
| | வி. தர்சனா | தமிழ், சமயம், கணிதம் |
| தரம் 02 | உ. அக்சஜா | பொதுதகைமை, தமிழ்,கணிதம், சுற்றாடல், சமயம் |
| | கி. தாருஸ்சன் | பொ.த,தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| | வி. சந்தோஷ் | கணிதம் |
| தரம் 03 | இ. கவிப்பிரியா | பொ.த,தமிழ், கணிதம், சுற்றாடல் சமயம், ஆங்கிலம் |
| | ப. ஷார்மிலி | பொ.த,தமிழ், கணிதம், சுற்றாடல் சமயம், ஆங்கிலம் |
| | ஜெ. கவிராஜ் | தமிழ், கணிதம், சமயம் |
| | தே. சஜந்தன் | தமிழ் |
| தரம் 04 | போ. சுஜின் | தமிழ், சுற்றாடல் |
| | க. கடம்பேசன் | தமிழ், ஆங்கிலம் |
| தரம் 05 | ர. விதுசன் | சுற்றாடல், தமிழ், கணிதம் |
| | இ. விபீஷணன் | கணிதம் |
| தரம் 06 | ந. சாரங்கன் | தமிழ், கணிதம், விஞ்ஞானம், புவியியல், குடியியல், செயன்முறை |
| | கு.டிலக்சன் | கணிதம் |
| | சி. பிரதாஸ் | பொ.த,சமயம், தமிழ். ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம்,வரலாறு, புவியியல்,குடியியல், சுகாதாரம், |

| | | |
|---|---|---|
| | | செயன்முறை |
| | பா. டான்சன் | விஞ்ஞானம்,புவியியல்,செயன்முறை |
| | அ. மோகனா | சங்கீதம் |
| | பா. சுவஸ்திகா | ஆங்கிலம்,விஞ்ஞானம்,வரலாறு, குடியியல்,நடனம் |
| | சி. சங்கீதா | சமயம், தமிழ், கணிதம். விஞ்ஞானம். வரலாறு, புவியியல் |
| தரம் 07 | கௌரிபாலன் | தமிழ், விஞ்ஞானம், வரலாறு, குடியியல், சித்திரம் |
| | யோ. பிருந்தன் | கணிதம் |
| | ர. கோகுல்ராஜ் | குடியியல் |
| | தே. சன்சிகா | சமயம், குடியியல், சங்கீதம் |
| | பு. டில்கா | வரலாறு, சங்கீதம் |
| தரம் 08 | தே. தேவ அனோஜன் | சங்கீதம் |
| | சி.லபிஷேக் | தமிழ், கணிதம், விஞ்ஞானம், குடியியல், செயன்முறை |
| | அ. சஞ்சீவன் | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, குடியியல்,புவியியல், சுகாதாரம் |
| | சி..ஜிந்துசன் | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, குடியியல்,புவியியல்,சங்கீதம், சுகாதாரம் |
| | சி. சுகன்யா | தமிழ், குடியியல் |
| | ச. தனுசிகா | சங்கீதம் |
| தரம் 09 | அ. அபிசங்கர் | விஞ்ஞானம், வரலாறு, குடியியல் |
| | இ. கீர்த்தனா | ஆங்கிலம், வரலாறு, சுகாதாரம் |
| | ச.சாந்தினா | தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், குடியியல் |
| | பு. நிந்துஜா | கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் |
| | ப.பிரியவதனன் | சமயம். தமிழ், ஆங்கிலம், |

| | | |
|---|---|---|
| தரம் 10 | | கணிதம்,வரலாறு,வணிகம், தமிழ் இலக்கியம் |
| | த. பவீசன் | தமிழ் இலக்கியம் |
| | இ. ஸ்ரீகஜன் | தமிழ் இலக்கியம் |
| | த. துஸ்மிலானி | தமிழ் இலக்கியம் |
| தரம் 11 | ச. சுவேந்திரன் | வரலாறு |
| | வி. எழில் | புவியியல் |

பொ.த : பொதுத் தகைமை

## ஒழுங்கான வரவுக்கான பரிசில்கள்

- தரம் 6 – ம. கஜானன்
- தரம் - 7 ம. டிலக்சிகா
- தரம் - 8 வ. தர்மிகா
- தரம் - 9 ச. சாந்தினா
- தரம் - 10 நா. ஜெபின்சன்

**“என்றைக்கு உன்னிடம் அகம்பாவம் வேர் முளைக்கத் தொடங்கி விட்டதோ அன்றிலிருந்து நீ செயலற்றுப் போய்விடுவாய்.”**

**“நம் வாழ்வும் கற்பூரம் போலத்தான் சுடர் விட்டுக் காற்றில் மறையும்.”**

# பாடசாலை வரலாற்றுச் சுருக்கம்

(ஸ்தாபித்த திகதி, ஸ்தாபித்த நோக்கம், வளர்ச்சி, சவாலான கட்டங்கள், தற்போதைய சமூக எதிர்பார்ப்பு)

- ஸ்தாபகர்: உயர்திரு த. குமாரசுவாமிப்பிள்ளை
- ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு : 1922.10.22
- முதலாவது தலைமை ஆசிரியர்: திரு. எஸ். வேலுப்பிள்ளை
- ஆரம்ப மாணவர் தொகை : 50 (ஐம்பது)
- 1929 இல் பதிவு செய்யப்பட்டு முகாமைத்துவ சைவவித்தியா அபிவிருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.
- திரு. எஸ். சுதாசிவம்பிள்ளை அதிபராக இருந்த காலத்தில் கிழக்குப் புறம் நிரந்தர கட்டடம் திரு.த.நீதிராஜா சகோதரர்களின் உதவியுடன் அமைக்கப்பட்டது.
- 1960 இல் இப்பாடசாலை அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது
- தரம் 7 வரை இருந்த இப்பாடசாலை 1969இல் திரு. த. தர்மலிங்கம் அதிபரால் தரம் 11 வரை ஆக்கப்பட்டது. (தரம் 11 பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது)
- திரு. தர்மலிங்கம் அதிபர் காலத்தில் பாடசாலைக்கீதம், அடையாளமுத்திரை, சீருடை, இல்ல அமைப்பு ஆகிய முக்கிய அம்சங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- 1972 இல் பொன்விழா கொண்டாடப்பட்டு அதன் நினைவாக 1974 இல் புலவர் அரங்கு அமைக்கப்பட்டது
- 1982 இல் வைர்விழா கொண்டாடப்பட்டு அதன் நினைவாக "ஞானபண்டிதம்" என்ற மலர் வெளியிடப்பட்டது.
- திரு. கா. கணேசதாசன் அதிபரான காலத்தில் ஞானவைரவர் கோயில் புனர்நிர்மானமும் .கும்பாபிஷேக விழாவும் சிறப்பாக நடைபெற்றது
- 1995இல் திரு. க. பழனிவேற்பிள்ளை அதிபராக இருந்த காலத்தில் இப்பாடசாலை மிகவும் இயங்கியது.

- 1996.10.01 இல் திரு. கி. கிருஸ்ணகுமார் அதிபரானார் இவர் காலத்தில் உலக வங்கியின் அனுசரனையுடன் நூலகமும் மலசலகூடங்களும் அமைக்கப்பட்டது.
- திரு. கி. கிருஸ்ணகுமார் அதிபர் காலத்தில பவளவிழாவும் இடம்பெற்றது.
- 2006 இல் திரு க. பரமேஸ்வரன் அதிபராக பொறுப்பேற்றார்
- 2009 இல் திரு செ. இளங்கோ அதிபராக பொறுப்பேற்றார். இவர் காலத்தில் கணனி அறை, சமையல் அறை, என்பன அமைக்கப்பட்டதுடன் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், பாடசாலை முற்றத்துடன் பொருத்தப்பட்டதுடன் கட்டடங்கள் யாவும் வர்ணம் பூசி மெருகூட்டப்பட்டது. அத்துடன் வகுப்பறைகள் யாவற்றுக்கும் மின்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்பக்கல்வி வகுப்பறையில் சுவர்களில் கற்றலுக்கு படங்கள் வரையப்பட்டு வர்ணமூட்டப்பட்டது. அதிபர் அலுவலகம் சீலிங் இடப்பட்டு பாகமிடப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டது.
- 2011இல் திரு. ந. கந்தவனச்செல்வன் அதிபராக பொறுப்பேற்று தொடர்ந்து நடத்தி வருகிறார் இவர் காலத்தில் வலைப்பின்னல் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு அதனூடாக தகவல் பரிமாறப்படுகின்றன. பாடசாலை மாணவர் ஆசிரியர்களுக்கான மின் விசிறி பொருத்தப்பட்டதுடன் வெளி அரங்கு புனரமைக்கப்பட்டு வகுப்பறை ஆக்கப்பட்டுள்ளது.இவர் பாடசாலையைப் பொறுப்பேற்ற பின்னரே உள்ளக விளையாட்டுக்கள் ஆரம்பிக்கப்பட்டடு பயிற்சியும் வழங்கப்பட்டு மாணவர்கள் தேசிய மட்டம் வரை சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது
- 2016, 2017ம் ஆண்டுகளில் பட்மின்ரன் ஆண்கள் அணியினர் தேசியமட்டத்தில் பங்குபற்றி வருகின்றனர். அத்துடன் அதிபரின் முயற்சியினால் 2016ம் ஆண்டு ஆசிரியர்களுக்கான நவீன மலசலகூட வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சமூக எதிர்பார்ப்பு

- மாணவர்களின் கற்றல் பெறுபேறுகளின் அதிகரிப்பினை எதிர்பார்ப்பதுடன் தரம் 1 தரம் 6 இல் சேரும் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பினையும் எதிர்பார்க்கின்றது. பாடசாலையின் அயலில் மாணவர்களை உள்வாங்கி அவர்களுக்கு ஏற்ற வசதிகள் கொண்ட பாடசாலையாக உருவாக்குதல்
- மாணவர்களுக்கு உரிய நவீன கற்றல் கற்பித்தல் சாதனங்களுடன் கூடிய வினைத்திறன் மிக்க கற்றல் செயலட்டை ஒழுங்கமைத்தல்

**“எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பது மேல்”**

**“உங்கள் குழந்தைகளுக்கு சிறந்த முன்மாதிரியாக நீங்கள் வாழ்ந்து காட்டுங்கள்”**

**“என்றைக்கு உன்னிடம் அகம்பாவம் வேர் முளைக்கத் தொடங்கி விட்டதொ அன்றிலிருந்து“**

**கடவுளை எங்கும் தேட வேண்டாம் உன் மனதில் கடவுளை உறையவை”**

# வித்தியாலய கீதம்

வாழிய வாழிய வாழியவே
வளர்கலைக் கூடம் வாழியவே
தாழ்வில் மாணவரு ள்ளமெலாம்
தழைவுற வோங்கி வளர்ந்திடவே
வாழ்வுப் பெருமையும் நல்லொழுக்கும்
மலரத் திருவில் உய்த்திட்டு வாழிய

ஞான பண்டித கலைக்கூடம்
நாளும் சுற்றாங் கொழுகென்று
ஞானம் வாய்மை நல்லுரைகள்
நமக்கு போதித் தெமையூக்கி வாழிய

ஞான வைரவ ரருளாலே
தான தவமோ டுயர்முயற்சி
மானம் மலர்கொக் கூர்வளர
ஆன சிறப்போ டமரன்னாய் வாழிய

மனமொழி செயலில் செயலில் பண்புயர
இனமொழி சமயம் உயர்கலைகள்
கனநூ லறிவு கனிந்தோங்
தினமும் நின்னைச் சேவிப்போம் வாழிய

காணும் கல்விக் கலைத்துறையில்
பூணும் பணியில் நாம்மிளர
மாணவர் நாங்கள் பெறும்
மாண்பார் செல்வி நினதேயாம். வாழிய

